# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை- 2023

| தரம் : 11 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II | நேரம் : 3.00 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : ................................ | | மேலதிக நேரம் 10 நிமிடங்கள் |

**அறிவுறுத்தல்கள்**
- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (ஒ) இடுக.**
- **அவ் விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.**

## பகுதி I

- பின்வரும் சம்பவக் கற்கையை அடிப்படையாகக்கொண்டு 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

20 வருட பொலிஸ் சேவையில் இருந்து விலகிய குமரன் என்பவர் ‘ஸ்மார்ட்’ என்னும் பெயரில் பாதுகாப்புச் சேவை நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து வாடகை அடிப்படையில் தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரச திணைக்களங்களுக்குத் தேவையான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை உயர்தரத்துடன் வழங்கி வருகின்றார்.

01) ‘ஸ்மார்ட்’ நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்படும் தேவையாக அமைவது
(1) உணவு (2) உடை (3) பொழுதுபோக்கு (4) பாதுகாப்பு

02) உற்பத்தி தன்மை அடிப்படையில் ஸ்மார்ட் வணிகம் ஒரு
(1) பொருள் உற்பத்தி வணிகமாகும்
(2) சேவை உற்பத்தி வணிகமாகும்
(3) பொதுத்துறை வணிகமாகும்
(4) தனியார்துறை வணிகமாகும்

03) குமரன் தன்னுடைய வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு உதவியாக அமைவது
(1) உடல்வலிமை
(2) பொலிஸ்பாதுகாப்புச் சேவையில் சேவையாற்றியமை
(3) தரமான சேவை
(4) போதிய நிதி வசதி காணப்பட்டமை

04) மேற்படி வணிகத்தின் பெயரினை பதிவு செய்யும் சட்டம்
(1) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
(2) 1972 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டம்
(3) 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வியாபாரப் பெயர்ப்பதிவு கட்டளைச் சட்டம்
(4) 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டம்

05) மேற்குறித்த வணிகத்திற்கு வாடிக்கையாளராகக் கருதப்படக் கூடியவர்கள்
(1) ‘ஸ்மார்ட்’ பாதுகாப்புச் சேவை வழங்கும் குமரன்
(2) பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(3) தனியார் வங்கிகள், நிதிநிறுவனங்கள், அரச திணைக்களங்கள்
(4) மேற்கூறிய அனைவரும்

06) பின்வரும் வணிக அமைப்புக்களுள் அதிக மூலதனத்தை திரட்டுவதற்கு முடியுமான அமைப்பு வகையாகக் காணப்படுவது எது?
(1) தனியுடைமை வணிகம்
(2) பங்குடைமை வணிகம்
(3) கூட்டுறவுச் சங்கம்
(4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

07) வணிக அமைப்புக்களை தனியார், பொதுத்துறை என இரு வகைகளாக வகைப்படுத்தும் நியதியாக அமைவது
(1) உரிமை அடிப்படை
(2) நோக்கத்தின் அடிப்படை
(3) அளவு அடிப்படை
(4) முகாமை அடிப்படை

08) மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கினைக் கொண்டிருக்கும் ராகுல் தனது வீட்டுத் தொலைபேசிக் கட்டணத்தினை இலத்திரனியல் அட்டை ஒன்றின் மூலம் செலுத்தினார். அவரிடமுள்ள இலத்திரனியல் அட்டையானது
(1) கடன் அட்டை ஆகும்.
(2) வரவட்டை ஆகும்.
(3) முற்கொடுப்பனவு அட்டை ஆகும்.
(4) SET அட்டையாகும்.

09) ஆதித்தன் என்பவர் ஆகாஷிடம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட காசோலையினை வங்கிக் கருமபீடத்தில் சமர்ப்பித்து பணமாக மாற்றிக் கொண்டார்.
மேலே தரப்பட்ட சம்பவத்தில் வழங்கப்பட்ட காசோலையானது
(1) பொதுமுறைக் குறுக்குக் கோடிடப்பட்டதாகும்.
(2) சிறப்புமுறைக் குறுக்குக் கோடிடப்பட்டதாகும்.
(3) குறுக்குக் கோடிடப்படாததாகும்
(4) வங்கி நடைமுறைக்கணக்கில் வைப்புச் செய்ய முடியாததாகும்.

10) பாலன் என்பவர் ரூ 1000000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தினை அதே பெறுமதியில் காப்புறுதி செய்து கொண்டார். மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளானதில் ரூ 600000 பெறுமதியான சேதம் ஏற்பட்டது. பாலன் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து ரூ 1000000 ஐ சேதத்திற்கான நட்டஈடாக கோரினார். காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பாலனுக்கு எவ்வளவு தொகை நட்ட ஈடாகக் கிடைக்கும்?
(1) ரூ 600000
(2) ரூ 1000000
(3) ரூ 400000
(4) ரூ 1600000

11) தொடர்பாடற் செயன்முறையின் கூறுகள் கீழே தரப்படுகின்றது.
A - ஊடகம்
B - பெறுபவர்
C - பின்னூட்டல்
D - செய்தி
E - அனுப்புவர்
F - துலங்கல்
தொடர்பாடற் செயன்முறையின் கூறுகளின் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) E, D, A, B, C, F
(2) E, D, A, B, F, C
(3) E, D, B, F, C, A
(4) E, D, A, F, B, C

12) வெளிநாடுகளுக்கு பிரயாணி ஒருவர் பயணம் செய்வதற்கு கடற்போக்குவரத்தைக் காட்டிலும் விமானப் போக்குவரத்து மிகப் பிரசித்தி பெற்றதாக இருப்பதற்கான காரணம்
(1) ஒரு நாட்டில் எந்த இடத்திற்கும் இலகுவில் பிரயாணம் செய்ய முடியும்.
(2) கூடிய பாதுகாப்பு மிக்கது
(3) பிரயாணச் செலவுகள் குறைவானதாகும்
(4) பிரயாண வழிகள் குறுகியவையாகவும், துரிதமானதாகவும் காணப்படல்.

13) மொத்த வியாபாரத்திற்கும், சில்லறை வியாபாரத்திற்கும் முக்கிய வேறுபாடாக இருப்பது

(1) பொருட்களின் எண்ணிக்கையில் (2) விற்பனையாளரின் நோக்கத்தில்

(3) கொள்வனவாளரின் நோக்கத்தில் (4) பொருட்களின் விலையில்

14) மொத்த வியாபாரம் ஒன்றை உருவாக்கும் போது கருத்தில் கொள்ளப்பட தேவையில்லாத விடயமாக அமைவது

(1) களஞ்சியசாலையில் இருக்கக் கூடிய இடவசதி

(2) போக்குவரத்து முறைகளை இலகுவில் பெறக்கூடிய வசதி

(3) தொழிற்சாலைகளுக்கு அண்மித்ததாக காணப்படல்

(4) நுகர்வோரை அண்மித்ததாகக் காணப்படல்

15) பின்வரும் கூற்றுக்களில் பாடசாலையொன்றில் திட்டமிடல் கருமத்தை எடுத்துக் காட்டுவது

(1) எதிர்வரும் வருடத்தில் க.பொ.த (சா/த) பரீட்சையின் சித்தி வீதத்தை 10% இனால் அதிகரித்தல்

(2) சித்தி வீதத்தை அதிகரிப்பதற்காக அனைத்துப் பாட ஆசிரியர்களையும் உள்ளடக்கி குழு ஒன்று உருவாக்கப்படல்

(3) தவணைப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டுதல்

(4) அதிபர் ஆசிரியர்களின் கற்பித்தல் கருமங்களை கண்காணித்தல்

16) தனியார் வங்கியொன்று சிறுவர்களிற்கான புதிய சேமிப்பு வைப்பு முறையொன்றை பத்திரிகைச் செய்தி மூலம் மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் கலவை மாறியாக அமைவது

(1) உற்பத்திப் பொருள் (2) மேம்படுத்தல்

(3) விலை (4) இடம்

17) ‘வரவு அதிகரிக்கின்றது செலவு குறைகின்றது’ எனும் தத்துவம் சரியாக அமைவது

(1) சொத்துக்கள், பொறுப்புக்கள் கணக்குகளுக்கு

(2) சொத்துக்கள், வருமானக் கணக்குகளுக்கு

(3) சொத்துக்கள், செலவினக் கணக்குகளுக்கு

(4) உரிமை, வருமானக் கணக்குகளுக்கு

18) சரியான கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது

(1) உரிமை + சொத்து = பொறுப்பு

(2) பொறுப்பு + சொத்து = உரிமை

(3) உரிமை + பொறுப்பு = சொத்து

(4) உரிமை − பொறுப்பு = சொத்து

19) பரிமளா தமது வணிகத்துக்காக ரூ 200000 வங்கிக் கடன் பெற்றார். இக்கொடுக்கல், வாங்கல் காரணமாக அவரது வணிகத்தின்

(1) சொத்துக்களும் உரிமைகளும் அதிகரிக்கும்

(2) சொத்துக்களும், பொறுப்புக்களும் அதிகரிக்கும்

(3) சொத்துக்கள் அதிகரிக்கும், உரிமை குறைவடையும்

(4) சொத்துக்கள் அதிகரிக்கும், பொறுப்புக்கள் குறைவடையும்

20) வங்கிக் கணக்குத் தயாரிப்பதற்கான மூல ஆவணமொன்றாக அமையாதது

(1) பற்றுச்சீட்டு

(2) காசோலை வைப்புச் சீட்டு

(3) காசோலை மறுப்பறிவித்தல் கடிதம்

(4) வங்கிக் கூற்று

21) பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) சில்லறைக் காசேட்டின் மீள்நிரப்புதல் முறைமையின் பிரகாரம், மாதாந்தம் சமமான தொகை செய்யப்படுதல் வேண்டும்.

(2) கொடுத்த கழிவு வருமானமாகும். பெற்ற கழிவு செலவினமாகும்.

(3) பற்றுக் கணக்கு ஒரு செலவினக் கணக்காகும்.

(4) ஒரு முதன்மையேடாகவும் அதேவேளை பேரேட்டுக் கணக்காகவும் தொழிற்படுவதே காசேட்டின் தொழிற்பாடாகும்.

22) காசுக் கழிவு அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்கள்

(1) ஏற்றுக் கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் கொடுப்பனவைச் செலுத்தும் போது

(2) காசு மூலமோ காசோலை மூலமோ கொடுப்பனவு செய்யப்படும் போது

(3) பண்டங்களை காசுக்கு கொள்வனவு செய்யும் போது

(4) காசோலை மூலம் மட்டுமே கொடுப்பனவு செய்யும் போது

23) பேரேட்டுக் கணக்கொன்றில் செலவுப் பக்கமானது வரவுப் பக்கத்திலும் அதிகமாக இருந்தால் மீதியானது

(1) வரவு மீதி எனப்படும் (2) செலவு மீதி எனப்படும்

(3) மிகை எனப்படும் (4) பற்றாக்குறை எனப்படும்.

24) கொடுத்த வாடகை ரூ 3500 வாடகைக் கணக்கில் ரூ 3050 எனப் பதியப்பட்டிருந்தால் அவ் வழுவினைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு

(1) வாடகைக் கணக்கு வரவு ரூ 450, தொங்கல் கணக்கு செலவு ரூ 450

(2) தொங்கல் கணக்கு வரவு ரூ 450, வாடகைக் கணக்கு செலவு ரூ 450

(3) வாடகைக் கணக்கு வரவு ரூ 3500, தொங்கல் கணக்கு செலவு ரூ 3500

(4) தொங்கல் கணக்கு வரவு ரூ 3500, வாடகை கணக்கு செலவு ரூ 3500

25) 01 டிசம்பர் 2022 ஆம் திகதி வங்கிக்கூற்றில் அனுகூலமான மீதியாக ரூ 20000 காணப்பட்டது. வங்கியினால் பதிவிடப்பட்ட அம்மாதத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

06/12 வைப்பிலிட்ட காசோலைகள் ரூ 4000

10/12 நிலையியல் கட்டளைக் கொடுப்பனவு ரூ 7000

15/12 வங்கியில் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைக்கான கொடுப்பனவு ரூ 11000

25/12 கடன்படுநர் அனுப்பிய பணம் ரூ 9000

31.12.2022 இல் வங்கிக் கூற்று மீதி எவ்வளவு?

(1) ரூ 13000 (2) ரூ 15000 (3) ரூ 24000 (4) ரூ 6000

26) பரீட்சை மீதி தயாரித்தலின் பிரதான நோக்கம்

(1) இரட்டைப் பதிவின் செம்மையை உறுதி செய்ய

(2) எண்கணித செம்மையை உறுதி செய்தல்

(3) இலாபத்தை அல்லது நட்டத்தை உறுதி செய்தல்

(4) சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் பெறுமானங்களை உறுதி செய்தல்

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 27 -30 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| A - | காணி கட்டிடம் | ரூ | 450000 |
| B - | கடன்பட்டோர் | ரூ | 120000 |
| C - | கடன்கொடுத்தோர் | ரூ | 105000 |
| D - | வியாபார இருப்பு | ரூ | 240000 |
| E - | வங்கி மேலதிகப் பற்று | ரூ | 50000 |
| F - | மோட்டார் வாகனங்கள் | ரூ | 200000 |
| G - | காசு மீதி | ரூ | 25000 |
| H - | வருமதி வருமானங்கள் | ரூ | 5000 |

27) நடைமுறைச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி யாது?
(1) ரூ 330000 (2) ரூ 335000 (3) ரூ 340000 (4) ரூ 390000

28) நடைமுறைப் பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி யாது?
(1) ரூ 105000 (2) ரூ 110000 (3) ரூ 155000 (4) ரூ 160000

29) திரவத்தன்மை ஒழுங்கில் அமையும் நடைமுறைச் சொத்துக்களின் தொகுதி எது?
(1) D H G B (2) H G D E (3) G B H D (4) D B H G

30) நடைமுறையல்லாச் சொத்தின் மொத்தப் பெறுமதி யாது?
(1) ரூ 650000 (2) ரூ 570000 (3) ரூ 390000 (4) ரூ 155000

31) வானதி வணிகம் தமது வணிகத்தின் மூலம் உழைத்த மேலதிகம் ரூ 60000 ஐ 01.05.2022 இல் தேசிய சேமிப்பு வங்கியில் 10% வருடாந்த வட்டி வீதத்தை வழங்கும் நிலையான வைப்பில் முதலீடு செய்தது. 30.04.2023 இல் வருடாந்த வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். 2022.13.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றின்படி
(1) நிதிநிலைமைக் கூற்றில் அட்டுறு வருமானம் ரூ 2000 ஆகும்.
(2) வருமானக்கூற்றில் வட்டி வருமானம் ரூ 6000 ஆகும்.
(3) நிதிநிலைமைக்கூற்றில் வருமதி வட்டி வருமானம் ரூ 6000 ஆகும்.
(4) வருமானக்கூற்றில் வட்டி வருமானம் ரூ 4000 ஆகும்.

32) இலாப நட்டக்கூற்றில் அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கிய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) வருமானங்கள், செலவினங்கள்
(2) சொத்துக்கள், பொறுப்புக்கள்
(3) உரிமைகள், செலவினங்கள்
(4) உரிமைகள், பொறுப்புக்கள்

33) குறித்த நிதியாண்டொன்றில்விற்பனைக் கிரயம் கணிப்பிடுவதற்கான சமன்பாடாக அமைவது
(1) விற்பனைக் கிரயம் + ஆரம்ப இருப்பு
(2) விற்பனைக்குத் தயாரான இருப்பு + இறுதி இருப்பு
(3) விற்பனைக்குத் தயாரான இருப்பு − இறுதி இருப்பு
(4) ஆரம்ப இருப்பு + கொள்வனவு

34) பின்வருவனவற்றுள் விற்பனை விநியோகச் செலவுகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதி எது?
(1) விளம்பரம், காப்புறுதி, வாடகை
(2) வங்கிக் கட்டணம், வங்கிக் கடன் வட்டி, அறவிடமுடியாக் கடன்
(3) தீயழிவு, விளம்பரம், கொடுத்த கழிவு
(4) விற்பனை ஊழியர் சம்பளம், விளம்பரம், கொடுத்த கழிவு

➢ கீழே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 35 – 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.

31.12.2022 இல் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பரத் வணிகத்தின் நிதிநிலைமைக் கூற்றில் இருந்து எடுக்கப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்படுகின்றது.

| | |
|---|---|
| தளபாடம் கிரயம் | ரூ 100000 |
| தளபாடம் தேறிய மீதி (31.12.2022) இல் | ரூ 50000 |
| இறுதியிருப்பு | ரூ 35000 |
| கடன்பட்டோர் | ரூ 40000 |
| காசு மீதி | ரூ 25000 |
| 10% வங்கிக்கடன் | ரூ 100000 |
| அட்டுறு தொலைபேசிக் கட்டணம் | ரூ 3000 |
| மூலதனம் | ரூ 100000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 35000 |
| அட்டுறு வங்கிக் கடன் வட்டி | ரூ 4000 |
| தேறிய இலாபம் | ரூ 78000 |

மேலதிக தகவல்கள்

- நிதியாண்டில் அறவிடமுடியாக் கடனாக ரூ 3000 பதிவழிக்கப்பட்டிருந்தது.
- வங்கிக் கடன் 01.01.2022 இல் பெறப்பட்டிருந்தது.
- மாதாந்த தொலைபேசிக் கட்டணம் ரூ 2000 ஆகும்.
- தளபாடங்களுக்கு வருடாந்தம் 10% பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

35) தளபாடங்களுக்கான திரண்ட பெறுமானத் தேய்வும், குறித்த நிதியாண்டுக்கான பெறுமானத் தேய்வுத் தொகையும் முறையே

(1) ரூ 50000, ரூ 10000 (2) ரூ 100000, ரூ 10000
(3) ரூ 10000, ரூ 50000 (4) ரூ 100000, ரூ 50000

36) குறித்த நிதியாண்டிற்காக செம்மையாக்கப்படுவதற்கு முன் கடன்பட்டோர் மீதி

(1) ரூ 40000 (2) ரூ 43000 (3) ரூ 3000 (4) ரூ 46000

37) 31.12.2022 இல் தயாரிக்கப்பட்ட இலாபநட்டக் கூற்றில் காட்டப்பட்டிருந்த தொலைபேசிக் கட்டணத்தின் பெறுமதி

(1) ரூ 24000 (2) ரூ 3000 (3) ரூ 27000 (4) ரூ 30000

38) குறித்த நிதியாண்டில் காசாக செலுத்தப்பட்ட வங்கிக்கடன் வட்டியின் பெறுமதி யாது?

(1) ரூ 4000 (2) ரூ 10000 (3) ரூ 6000 (4) ரூ 14000

39) குறித்த நிதியாண்டில் காணப்பட்ட நடைமுறைச்சொத்தின் மொத்தப் பெறுமதி

(1) ரூ 75000 (2) ரூ 65000 (3) ரூ 60000 (4) ரூ 100000

40) 31.12.2022 இல் பரத் வணிகத்தில் காணப்பட்ட உரிமைகளின் மொத்தக் கூட்டுத்தொகை

(1) ரூ 78000 (2) ரூ 178000 (3) ரூ 320000 (4) ரூ 100000